**19. அட்சய பாத்திரக் கதை**

பாண்டவர்கள்நாட்டில் இருந்தபோது சிறந்த அறங் களைச் செய்து சீருடன் வாழ்ந்தார்கள். தம்முடைய நாட் டில் யாரும்பசிப்பிணியால் வருந்தாதவாறு அறச்சாலைகளை ஏற்படுத்தி நன்கு புரந்தார்கள். துரியோ



தன்னுடையசூழ்ச்சியால் நாடிழந்து காட டைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முனிவர்கள் முதலிய பலர் தம்மைச் சூழக், காட்டைப் பாண்டவர்கள் அடைந்தார்கள். பாண்டவர்களைச் சூழ்ந்து சென்றோர் பன்னீராயிரம் பேர் என்ப. அவர்கள் அனைவருக்கும் உணவிட வேண்டிய பொறுப்புத் தருமருடைய தாகவிருந்தது.தருமர் சவுனகர் என்னும் ஒரு முனிவரைக் கண்டு வணங்கினார். முனிவர் தருமருடையநல்லியல்புக்குப் பெரி தும் மகிழ்ந்தார். அருமறை ஒன்றை அருள் செய்தார். தருமர் அம்மறையை உள்ளிக்கதிரவனை நோக்கித் தவம் புரிந்தார். கதிரவன் காட்சி தந்தான்; வியக்கத்தக்க பொற்கலம் ஒன்றைவழங்கினான். எவ்வளவு பேருக்கு. உணவு வேண்டுமென்று எண்ணினாலும் அவ்வளவு பேருக்கும் உணவளிக்கும் இயல்பு அமையப் பெற்றது அக் குறைவிலா ஏனம் (அட்சயபாத்திரம்.) பாண்டவர்கள் தம்மோடு வந்தபன்னீராயிரம் பேர் கட்கும் அக்கலத்தின் உதவியால் அரிய உணவளித்துத் தாமும் உண்டு மகிழ்ந்தார்கள். காட்டில் இருந்தபோ தினும் நாட்டில் இருப்பதைப் போன்றே நலம் பெற்றுர்கள். தான் உண்ணும் உணவினைப்பகுத்துண்ணும் பண்பு பொருந்திய வனைப் பசியென்னும் தீய நோய் சேர்தல் அருமையாகும் என்னும் பெரியோர்வாக்குப் பாண்டவர்களிடத்தில் உண்மையாக விளங்கியது.

[அறவினையாளன்] (பாரதம்)